DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 238/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | :முத்துப்பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 16.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th May 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் ராஜேஸ்கண்ணனை தெரியும். எழில்நகரில் எனது வீட்டிற்கு எதிர் வீட்டில் ராஜேஸ்கண்ணனின் அத்தான் கதிரேசன் என்பவர் குடியிருந்து வருகிறார். 2011, 2012ம் ஆண்டுகளில் கதிரேசன் குடும்பத்துடன் பாம்பேவுக்கு அவரது மகனை பார்ப்பதற்காக சென்றுவிட்டார்கள். இரவு நேரங்களில் மின்விளக்கு போடுவதற்காக என்னிடம் வீட்டின் சாவியை ஒப்படைத்துவிட்டு சென்றிருந்தார். வழக்கமாக இரவில் மின்விளக்கை போட்டுவிட்டு பகலில் மின்விளக்கைஅணைப்பது வழக்கம். சம்பவத்தன்று காலையில் மின்விளக்கை அணைப்பதற்காக போனேன். அப்போது பின்பக்கம் உள்ள கதவு உடைக்கப்பட்டிருந்தது. நான் உடனே கதிரேசனின் மைத்துனர் ராஜேஸ்கண்ணனுக்கு தகவல் கொடுத்தேன். வீட்டுச்சாவி ராஜேஸ்கண்ணனிடம் இருந்தது. கேட்சாவி

மட்டும்தான் என்னிடம் இருந்தது. எனவே ராஜேஸ்கண்ணன் வந்ததும் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது மெயின் ஹாலில் உள்ள குத்துவிளக்கு காணாமல் போயிருந்ததாக சொன்னார். அறைக்குள் சென்று பார்த்தபோது அறைக்குள் இருந்த ஒரு குத்துவிளக்கை காணவில்லை. மொத்தம் 2 குத்துவிளக்கை காணவில்லை. இது சம்பந்தமாக ராஜேஸ்கண்ணன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் ராஜேஸ்கண்ணன் எனது நண்பர் என்றால் சரிதான். கதிரேசன் என்பவரின் வீட்டின் எண் தெரியுமா என்றால் 1291 ஆகும். இதைத்தான் எனது முதல்விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கதிரேசன் என்பவரின் வீட்டில் என்னன்ன பொருட்கள் உண்டு என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அவர் எனது நண்பர் என்பதால் அவர் வீட்டிற்கு நான் செல்வதுண்டு. அதன்பேரில் எனக்கு தெரியும். கதிரேசன் வீட்டில் 3 அறைகள் உள்ளன. கதிரேசன் வெளியூர் செல்லும்போதெல்லாம் அவரது வீட்டின் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டு செல்வார். ராஜேஸ்கண்ணன் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. புகார்தாரர் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ளதுபோல் கதிரேசன் வீட்டில் நான் மின்விளக்குகளின் ஸ்விட்சை போடுவதில்லை என்றால் சரியல்ல. கதிரேசன் வீட்டின் சாவியை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் போலீசார் அது பற்றி என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் ஒப்படைக்கவில்லை. நான் சொல்வது போல் கதிரேசன் வீட்டில் எந்த திருட்டுசம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.